**சுருக்கம்**

அரசியல் ஓய்வூதியம் – வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பேரனின் மனைவி ஆகியோருக்கு வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் – உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது (அரசியல் ஓய்வூதியம்–2)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.576**

**நாள்: 25.08.2022**
**சுபகிருது வருடம், ஆவணி –09**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**
**படிக்கப்பட்டது:**

அரசாணை (நிலை) எண்.768, பொது (அரசியல் ஓய்வூதியம்–2)த் துறை, நாள் 31.08.2021.

*******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பேரனின் மனைவி ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.9,000/–ஆக கடந்த 15.08.2021 முதல் உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.08.2022 அன்று நடைபெற்ற 76–வது சுதந்திர தின விழாவின் போது, சென்னை, தலைமைச் செயலகத்தின் கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைத்த பின் ஆற்றிய உரையில், வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள், மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பேரனின் மனைவி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.9,000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தப்படும் எனவும், அறிவித்துள்ளார்.

**த.பி.பா.....**

3. இவ்வாண்டும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள், மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பேரனின் மனைவி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் மாதமொன்றிற்கு ரூ.9,000/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தியும், மேற்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுவதால் ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.10,57,500/- (ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இந்த ஓய்வூதிய உயர்வானது 15.08.2022 முதல் நடைமுறைக்கு வருகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2235- சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் - 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் - மாநிலச் செலவினங்கள் - AF விடுதலைப் போராட்ட வீரர்கள், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் ஓய்வூதியங்கள் - 327 ஓய்வூதியங்கள் - 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்" (IFHRMS த.தொ.கு.2235 60 102 AF 32705).

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.10,57,500/-ஐ மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மானியத் கோரிக்கையில் கொணர்ந்து, சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருக்களை தவறாது உரிய நேரத்தில் நிதி (வருவாய்) (வ.செ.பொ-1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

த.பி.பா.....

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.41072/வருவாய்/2022, நாள்:24.08.2022–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1038 (ஆயிரத்து முப்பத்து எட்டு). (IFHRMS ASL NO.2022081038).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டி.ஜகந்நாதன்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாக ஆணையரகம்,
எழிலகம் கட்டிடம், சேப்பாக்கம், சென்னை – 600 005.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகம், 3–வது மாடி,
அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35.
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை.
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம், மதுரை.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி.
மாவட்ட கருவூல அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம்.
மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை.
மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை.
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை– 35. (பெயரில்)
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை – 09.

**நகல்:**
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–9. ( கோப்பு எண்.26231/அ.ஓ.2/2022).
நிதி (ஜி.பி.சி / பல்வகை (பொது) / ஓய்வூதியம்)த் துறை,
நிதி (வரவு செலவு–பொது–I–II)/ வ.வ.I/வருவாய்)த் துறை, சென்னை–09.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (வரவு செலவு)த் துறை, சென்னை–09.
பொது (அரசியல் ஓய்வூதியம்.1 மற்றும் 3)த் துறை, சென்னை –09.
பொது (பல்வகை)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
பொது (அ.ந.மு.1)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
இ.கோ/உபரி

**//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//**

அ. புக்மஜா
25/08/2022
**பிரிவு அலுவலர்**